ॐ

ஓம்

ஸ்ரீ குருப்யோ நம :

# ஸ்ரீ ஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்

## வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட்

(பதிவு எண்: 226 / 1992)




சத்திரப்பட்டி சாலை,
வேதபுரீ, தேனி. - 625 531



ஓம்
ஸ்ரீ குருப்யோ நம:

# உள்ளம் தோறும் வள்ளுவம்

## வள்ளுவம் வழங்கும் வாழ்வியல்
## ஸனாதன நெறியில் வள்ளுவம்

### அறத்துப்பால்



# ஸ்ரீஸ்வாமீ பூர்ணாநந்தர்

## பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகளின் சீடர்



நாள் :
14, கார்த்திகை 2025

Date:
30, November 2025

www.vedaneri.org

வகுப்பு 15

அதிகாரம் : 9

# அறத்துப்பால் – இல்லறவியல்

## விருந்தோம்பல்
## (விருந்தினரை உபசரித்தல்)



தெரிந்தவராகவோ அல்லது தெரியாதவராகவோ புதியதாக வரும் அதிதிகளை உணவு முதலானவை கொடுத்துக் கவனித்தல்.

இல்வாழ்க்கையில் ஐம்புலத்தாறு ஓம்பல் தலை என்று கூறப்பட்டதில் (குறள்: 43 )
தென்புலத்தார், தெய்வம் - கண்ணுக்குக் காணாதவர்.
ஒக்கல், தான் - பிறர் அல்ல, ஆதலால் கொடுத்தல் ஆகாது.

விருந்து = வெளியிலிருந்து வரும் ஏற்கனவே அறிமுகம் ஆன அல்லது ஆகாத புதியவர். அவருக்கு அதிதி - நாள் குறித்துச் சொல்லாமல் வருபவர் - என்று பெயர். அவரை உபசரித்தல் விருந்தோம்பல் ஆகும்.

அதிதி தேவோ பவ - தைத்திரீய உபநிஷத்.



- குறள்கள் : 1, 2 - விருந்தோம்பலின் சிறப்பு

  விருந்துபசரித்தலே முதன்மையான அறம்.

- குறள்கள் : 3 - 5 இம்மைப் பயன்

  3. வறுமை வராது

  4. செல்வம் நிலைத்திருக்கும்

  5. உணவுக்குக் குறைவிருக்காது.

- குறள் : 6

  மறுமைப் பயன்

- குறள் : 7

  இம்மைப் பயன், மறுமைப் பயனுக்குக் காரணம்

- குறள்கள் : 8, 9

  இல்லாவிடத்து உண்டாகும் குற்றம்.

- குறள் : 10


  விருந்தோம்பும் முறை





# 1. இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு.

வீட்டிலிருந்து செல்வம் சேர்த்துக் காப்பாற்றி வாழ்வது என்பது விருந்தினரை போற்றி அவருக்கு வேண்டியவற்றைச் செய்து கொடுப்பதற்காகவே ஆகும்.



வேளாண்மை = உபகாரம்

இல்வாழ்வின் முதன்மையான முக்கியமான அறம் விருந்தோம்பல் ஆகும்.

விருந்தோம்பலில் இல்வாழ்வான் அறம் செய்வதற்கான வாய்ப்பு அவனைத் தேடி வருகிறது.

## 2. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
## மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

அமிர்தமேயாயினும் விருந்தினர் புறத்தே இருக்க தான் மட்டும் உண்ணுதல் விரும்பத்தக்கதல்ல.

இல்வாழ்வின் நோக்கம் புண்ணியம் சேர்த்தல் ஆகும். இன்னொருவருக்குக் கொடாமல் தானே அனுபவிப்பது பாவம் ஆகும். அது விரும்பத்தக்கதல்ல, ஆதலால் அதைத் தவிர்க்க வேண்டும்.

சாவா மருந்து - அமிர்தம்

“விருந்தோம்பி உண்பதே புண்ணியம் ஆகும்” என இவை இரண்டு பாட்டாலும் விருந்தோம்பலின் சிறப்புக் கூறப்பட்டது.

# 3. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
# பருவந்து பாழ்படுத லின்று.

தன் இல்லம் நோக்கி வந்த விருந்தினரை தினமும் உபசரித்து வருபவனது இல்வாழ்க்கையானது (வறுமை வந்து) துன்பப்பட்டு அழிவதில்லை.

வைகல் - நாள்தோறும்
பருவந்து - வருந்தி
பாழ்படுதல் - அழிதல்

விருந்தினரை உபசரித்தலால் செல்வம் குறைவதில்லை, மேன்மேலும் வளரும் என்பது கருத்து.



# 4. அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
# நல்விருந்து ஓம்புவான் இல்.

முகம் மலர்ச்சியுடையவனாக தகுந்த விருந்தினரை உபசரிப்பவனது வீட்டில் லக்ஷ்மிதேவி மனம் மகிழ்ந்து இருப்பாள்.

செய்யாள் = மஹாலக்ஷ்மி

நல்விருந்து - நற்கல்வியும் ஆசார அனுஷ்டானமும் உள்ள தகுதியான விருந்தினர்

விருந்தினரை தினமும் உபசரிப்பவரது வீட்டில் செல்வம் நிலைபெற்றிருக்கும்.



## 5. வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்.

முன்னே விருந்தினருக்கு உணவு கொடுத்துப் பின்னர் எஞ்சியதைத் தான் உண்பவனது விளைநிலத்தில் விதை விதைத்தலும் வேண்டுமா என்ன? (வேண்டியதில்லை, தானே விளையும்).

மிச்சில் = மிச்சமானது - எஞ்சியது.
புலம் = விளைநிலம்.

முறையாக விருந்தோம்புபவனுக்கு அதிக முயற்சியின்றியே இறையருளால் விளைச்சல் பெருகும்.


இவை மூன்று பாட்டாலும் இம்மைப் பலன் கூறப்பட்டது.

# 6. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
# நல்விருந்து வானத் தவர்க்கு.



வந்த விருந்தினரை உபசரித்தனுப்பி அடுத்து வரும் விருந்தினரை எதிர்பார்த்து இருப்பவன் (மறுபிறப்பில்) வானிலுள்ள தேவர்களுக்கு நல்ல விருந்தினனாவான்.

நல்விருந்து - சிறப்பு விருந்தினர்
(விதுரர் வீட்டிற்குக் கண்ணபிரானும் அப்பூதிகள் அடிகள் வீட்டிற்கு அப்பர் சுவாமிகளும் சென்றது போல.)



இதனால் மறுமைப்பயன் கூறப்பட்டது.

## 7. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
## துணைத்துணை வேள்விப் பயன்.

விருந்தினரை உபசரித்தல் எனும் வேள்வியின் பயன் இவ்வளவு என்று ஓரளவினை உடையதில்லை. அப்பயனுக்கு விருந்தினரது தகுதியின் அளவே அளவாகும்.

வேள்வி - மனுஷ்ய யஜ்ஞம்
பயன் - புண்ணியம்
துணை - (தகுதியின்) அளவு

தகுதியானவர்களுக்குக் கொடுப்பதனால் உண்டாகும் புண்ணியத்திற்கு அளவில்லை.
இதனால் இம்மைப் பயன் மறுமைப்பயன் இரண்டையும் தருவதற்குக் காரணம் கூறப்பட்டது. (கொடுப்பவர் பெறும் புண்ணியத்தின் அளவு பெறுபவர் பெறும் இன்பத்தின் அளவைப் பொறுத்தது.)

## ஐம்பெரும் வேள்விகள்

ப்ரஹ்மயஜ்ஞம் - வேத அத்யயனம்

தேவயஜ்ஞம் - இறைவழிபாடு

பித்ருயஜ்ஞம் - பித்ரு வழிபாடு

மனுஷ்யயஜ்ஞம் - மனிதர்களுக்கு உதவுதல்

பூதயஜ்ஞம் - மற்ற உயிர்களுக்கு உதவுதல்



## ஐம்பெருவேள்வி செய்வதற்கு ஹேது (காரணம்)

கிருகஸ்தன் யந்திரம் அல்லது முறம், அம்மி, துடைப்பம், உரல் உலக்கை, தண்ணீர்க்குடம் என்னும் இவ்வைந்தனையும் உபயோகப்படுத்துவதால் ஐவகைக் கொலைப் பாவங்கள் உண்டாகின்றன. அவ்வைந்து பாவங்களையும் போக்குவதற்காக மகரிஷிகளால் தினந்தோறும் ஐந்து மகாயஜ்ஞங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன.

அவ்வைந்து யஜ்ஞங்களில் வேதமோதுதல் ப்ரஹ்மயஜ்ஞம்.
அன்னத்தினாலாவது ஜல தர்ப்பணத்தினாலாவது பிதிர்க்களைக் குறித்துத் திருப்தி செய்வது பிதிர்யஜ்ஞம்.

தேவதைகளைக் குறித்து அக்கினியில் ஹோமம் செய்வது தேவயஜ்ஞம்.
வாயச (காக்கை) பலி முதலானவை வைப்பது பூதயஜ்ஞம். அதிதிகளுக்கு உணவிடுவது மானுடயஜ்ஞம்.

இவ்வைந்து மகாயஜ்ஞங்களையும் தன் சக்திக்குத் தக்கபடி எவன் செய்கிறானோ அவன் கிருகஸ்தாச்ரமத்தில் இருந்தபோதிலும் மேற்சொன்ன ஐந்து கொலைகளின் தோஷங்களையும் அடைவதில்லை“

– மனுதர்மம், அத்யாயம் 3.

ஒண்பிரம மேவேத மோதுதலோமம் வளர்த்தல்
எண்தெய்வ மீதல்பலி யேபூதம் - ஒண்டொடியீர்
எண்ணீர்க் கடனாற்ற லேபிதிர் விருந்தோம்பல்
அண்ணீர்மை மானுட யாகம்.

தானம் சிறிதாயினும் தக்கார்கைப் பட்டக்கால்
வானம்சிறிதாப் போர்த்து விடும்.

(நாலடியார் அறன்வலியுறுத்தல் பாடல் : 8)

கொடுக்கப்படும் பொருள் அற்பமாய் இருப்பினும் யோக்கியர் கையில் சேர்ந்தால் ஆகாயமும் அற்பமாகும்படி மூடிவிடும். (பொருள் கொடுத்ததனால் உண்டாகும் பயன் மிகப்பெரியதாகும் என்பது கருத்து.)

## 8. பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
## வேள்வி தலைப்படா தார்.

(செல்வம் இருக்கும் பொழுது அச்செல்வத்தால்) விருந்தினரை உபசரித்து வேள்விப்பயனை அடையும் (செல்வத்தைப் புண்ணியமாக மாற்றிக் கொள்ளும்) விவேகம் இல்லாதவர் (நிலையில்லாத அந்த செல்வத்தை) துன்பப்பட்டுச் சேர்த்து வைத்து (பின்பு அப்பொருளை இழந்து) இப்போது யாம் பற்றுக்கோடு இலர் ஆயினோம் என்று வருந்துவர்.

பரிந்தோம்பல் - வருந்திக் காப்பாற்றுதல்

பற்றற்றல் - வாழ்வாதாரம் இல்லாமல் போதல்

வேள்வி - வேள்விப் பயனாகிய புண்ணியம். (கருவியாகுபெயர்)

## 9. உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
## மடமை மடவார்கண் உண்டு.

செல்வம் உடையவனாக இருக்கும் காலத்தில் வறுமையாவது விருந்தினரை உபசரித்தலை விரும்பாது இகழ்ந்து பேசும் அறியாமை ஆகும். அந்த அறியாமை (சாஸ்த்ர அறிவில்லாத) மூடர்களிடமே உள்ளது. (அஃது அறிந்தோரிடத்து இல்லையாம்.)

உடைமையுள் இன்மை - செல்வத்துள் வறுமை - செல்வத்தை அறச்செயல்களுக்காக பயன்படுத்தத் தெரியாமை.

விருந்தோம்பல் ஓம்பா மடமை - விருந்தோம்பலின் பயனை அறியாமல் இகழ்ந்து பேசும் மூடத்தனம்.

பொருள் இருந்தும் பயனில்லை.

பொருளை நமக்காக மட்டும் பயன்படுத்தும் போது கிடைக்கும் இன்பத்தை விட விருந்தோம்பலினால் கிடைக்கும் இன்பம் மிகுதியானது. அதனால் புண்ணியமும் வருகிறது. அச்செல்வத்தை வெறுமனே சேர்த்து வைப்பதனால் பயனில்லாமல் போகிறது. இம்மை இன்பமும் இல்லை. மறுமை இன்பமும் இல்லை.

இவை இரண்டு பாட்டாலும் விருந்தோம்பல் இல்லாத இடத்து உண்டாகும் குற்றம் கூறப்பட்டது.



## 10. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
## நோக்கக் குழையும் விருந்து.

அனிச்சமலரானது முகர்ந்து பார்க்கும்பொழுது வாடிவிடும். அதுபோல விருந்தினர் முகம் வேறுபட்டுப் பார்த்தால் வருந்தி விலகிச் சென்றுவிடுவர்.

அனிச்சம் - ஒருவகை மரம். இங்கு அதன் மலரைக் குறிக்கிறது.

ஓரிரவு வரை புதிதாக வந்திருப்பவன் அதிதியென கருதத்தக்கவன்; நாள்தோறும் வாராது ஒருகாலத்து வருபவனுக்கு அதிதி என்று பெயர்.

- மனுதர்மம், அத்யாயம் 3.

வந்த விருந்து மலராத வதன நோக்கு முன்குழையும்
மந்த வடைவால் அகத்தன்பை யலர்ந்த முகத்தான் வெளிப்படுத்திச்
சந்த மணிவா யினுந்தோன்றச் சற்றும் வஞ்சங் கலவாமே
உந்துஞ் சுவையின் மொழியென்றும் உரைத்தல் வேண்டும் பயன்வேண்டின்.

- விநாயகபுராணம்.

தூரத்தில் பார்த்தவுடன் இன்முகம் காட்டலும் அருகில் வந்தவுடன் இன்சொல்லால் வரவேற்றலும் பின்னர் வேண்டியவை கொடுத்து உபசரித்தலும் விருந்தோம்பும் முறையாகும்.

முகமலர்ச்சியைக் காணாத விருந்தினர் மனம் மாறுபட்டு விலகிப்போவர் என்பதால் விருந்தோம்புபவர்க்கு முதலில் இன்முகம் வேண்டும் என்பது கூறப்பட்டது.

விருந்தினர் வாராமல் போனால் புண்ணியச் செயலைச் செய்யும் வாய்ப்பை இல்வாழ்வான் இழக்கிறான். இல்வாழ்க்கையின் பயன் இல்லாமல் போய் விடுகிறது என்பதால் விருந்தோம்புபவன் முதலில் இன்முகத்தோடு வரவேற்றல் அவசியமாகிறது.

ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்- தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

(மாங்குடி மருதனார்)

1. Youtube Channels:

   Swami Omkarananda

   Vedapuri Events

   Swami Purnananda Tamil



2. Instagram - swami om karananda
3. Facebook - Swami omkarananda
4. Facebook Group - Theni Swami Chidbhavananda Ashramam
5. Whatsapp Channel - Theni Swami Chidbhavananda Ashramam

94430 51910 www.vedaneri.org vedapuricamps@gmail.com